# அன்னை நினைவமுதம்

யாழ்ப்பாணம்- சுழிபுரம்
திருவாட்டி
நாகம்மா நல்லதம்பி (நல்லராசா மாஸ்டர்)
அவர்களின் நினைவான
"தோத்திரத் திரட்டு"

26-07-2006

## தாய்மையின்
## தூய்மை

- பிள்ளைகளிடம் எதையும் எதிர்பாராமல்
பிள்ளைகளுக்கு அப்போதைக்கு
வேண்டுவன செய்து வைப்பது
தாய்மையின் இயற்கை
தாய்மையின் செயல் நிஷ்காமிகமானது
மாசுமறு அற்றது தூய்மையானது
தாய்மையின் தைவிக தத்துவம் இருந்தவாறு -.

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் தலைவியாக,
குலவிளக்காய், இல்லத்தின் கோயிலாக,
நல்லதொரு தாயாக, காவல் தெய்வமாக,
அன்போடும், பண்போடும், பாசத்தோடும்,
கண்ணியமாக பாதுகாத்து
பொன், பொருள், செல்வம் எல்லாம் தேடியும்
எங்களை நல்வழி நடாத்தி
வாழ்வாங்கு வாழவைத்து
இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
பாதார விந்தங்களில்
இம்மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

உ

சிவமயம்



அமரர்

# திருவாட்டி நாகம்மா நல்லதம்பி

அன்னை மடியில்
25-02-1927

இறைவன் அடியில்
26-06-2006

ஆண்டு வியவருடம் ஆனித் திங்களிரு பத்தாறில்
பூண்ட பூர்வபக்கப் பிரதமையில்- காண்தகைய
அம்மை நாகம்மா ஆருயிரை நீத்தொருவிச்
செம்பொருளைச் சென்றடைந்த நாள்.

சுழிபுரம் - பறாளாய்
ஈசுர விநாயகர் தேவஸ்தானம்
PARALAI ESWARA VINAYAKAR KOVIL

CHULIPURAM
20.07.2006

## பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக வாழ்ந்த அமரர் திருமதி நாகம்மா நல்லதம்பி அவர்கள்....

"ஈழமண்டல நாடெங்கள் நாடே" என்று சின்னத்தம்பிப் புலவரால் பாடல் பெற்ற ஈழத்தின் வடபுலத்தில் பழமையும் புதுமையும், பெருமையும் தன்னகத்தே கொண்டு விளங்குவது "சோழியபுரம்" என்னும் சுந்தரக் கிராமம் ஆகும். இக்கிராமத்தை அருள் பாலிப்பது பறாளையம்பதி. இப்பதியின் சற்று மேற்றிசையில் அமையப் பெற்று வளம் பெறுவது சுழிபுரம் மேற்குப் பகுதியாகும். சுழிபுரம் மேற்கில் உயர் வேளாள சைவாசார வசதி படைத்த ஓர் நற்குடும்பத்தில் தோன்றியவர் அமரர் திருமதி நாகம்மா நல்லதம்பி அவர்கள்.

தாரமும் குருவும் தலைவிதிப்படியே என்பதற்கமைய நாகம்மா அவர்கள் இக்கிராமத்திலே நல்லாசானாக விளங்கிய சுப்பிரமணியம் நல்லதம்பி அவர்களைக் கைப்பிடித்து இல்லறம் நடாத்தி வந்தார்.அமரரின் இவ்வாழ்க்கையின் சிறப்பு பத்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாக வாழ்ந்தமையைக் குறிப்பிடலாம்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதென்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய பிள்ளைச் செல்வங்களைப் பெற்று மகிழ்ந்தனர். பிள்ளைகளும் கல்வியில் சிறந்து விளங்கினர்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என்பதற்கமைய அமரர் நாகம்மா நல்லதம்பி அவர்களுடைய பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடைய கல்வியறிவு, நற்பண்புகள் போன்றவற்றின் சிறப்புக்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. இப்படியாக மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளளைகளைப் பெற்று பெரு வாழ்வு வாழ்ந்த அமரர் நல்லதம்பி நாகம்மா அவர்கள் பறாளாய் விநாயகர், முருகன் பெரியதம்பிரான் ஆலய வழிபாட்டிலும் சிறந்து விளங்கினார். அத்தோடு உற்றார், உறவினர், அயலவர்களுக்கு உதவுவதிலும் சிறப்புற்று விளங்கினார். இவரது பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் அனைவருக்கும் ஈசுர விநாயகர் ஆறுதல் அளிப்பாராக.

அமரரின் கணவர் நல்லதம்பி அவர்கள் எமது கிராமத்தில் ஓர் புகழ்பூத்த ஓய்வுபெற்ற அதிபர், பண்பாளன், கல்விமான் அத்தோடு மிக்க செயல்திறன் உடையவர். சுழிபுரம் - பறாளாய் ஈசுர விநாயகரிடம் அளவுகடந்த பக்தி உடையவர். பக்திமார்க்க வழிநின்று ஆவணிச் சதுர்த்தியிலே ஈசுரவிநாயகருக்கு அங்கப் பிரதிஷ்டை செய்து எமது தேவஸ்தானத்தில் இவ்வுலகை நீத்தார். முத்தியடைந்தார். பக்தி மார்க்கத்திலே அங்கப் பிரதிஸ்டை செய்வதன் மூலம் முத்தியடையலாம் என்பதை அடியார்களுக்கு நிரூபித்துக் காட்டி சிறப்படைந்தார்.

இப்படியான ஆன்மீக ஈடுபாடுகளைக் கொண்ட குடும்பத்தவரான அமரர் திருமதி நாகம்மா நல்லதம்பி அவர்களுடைய நினைவாக இன்று **தேவாரத் தோத்திரத் திரட்டு** என்னும் பாமாலை வெளிவருவது மிகவும் பொருத்தமுடையதே. இதையிட்டு நான் மகிழ்ச்சியடைவதோடு எனது நல்லாசியையும் தெரிவிக்கின்றேன். இப்பாமாலையை நாம் நாள்தோறும் பாராயணம்

செய்வதன் மூலம் அமரரின் ஆத்மா சாந்தியடைவதாக!. உலகம் நன்மை அடைவதாக! என்று சர்வ வல்லமை பொருந்திய சுழிபுரம் பறாளாய் ஈசுர விநாயகரின் திருப்பாதங்களை வணங்கிப் பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
**சோழியபுரம்**
**சுழிபுரம்**

## பஞ்சபுராணப் பாடல்கள்

திங்கட்கிழமை

தேவாரம் பண்: கொல்லி

திருஞானசம்பந்தர் 3ம் திருருமுறை

திருச்சிற்றம்பலம்

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் ல.்.துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருவாசகம்

மாணிக்கவாசகர் 8ம் திருமுறை

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

பண்: சாளரபாணி

திருவிசைப்பா 9ம் திருமுறை

எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட் டெமை யாழும்
சம்பந்தன் காழியார் கோன் றன்னையும் ஆட்கொண்டருளி,
அம்புந்து கண்ணாளுந் தானும் அணி தில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே.

திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்

சேந்தனார் 9ம் திருமுறை

சொல்லாண்டசுரு திப்பொருள் சோதித்த தூய்மனத்
தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கேபல்லாண்டுகூறுதுமே.

புராணம்

சேக்கிழார் 12ம் திருமுறை

தூயவெண்நீறு துதைந்த பொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்து உருகிப்
பாய்வது போல் அன்பு நீர் பொழி கண்ணும் பதிகச்செஞ்
சொல் மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர்வீதிஉள்ளே.

திருச்சிற்றம்பலம்

**செவ்வாய்க்கிழமை**

தேவாரம் பண்:திருவிருத்தம்

திருநாவுக்கரசர் 4ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே.

திருவாசகம்

மாணிக்கவாசகர் 8ம் திருமுறை

காலமுண்டாகவே காதல் செய்(து) உய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண்டான் எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே.

திருவிசைப்பா

பூந்துருத்திகாடநம்பி 9ம் திருமுறை

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதம் மாற வெள்ளானை மேல் கொள்ள
முளையா மதி சூடி மூவாயிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே.

திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்

சேந்தனார் 9ம் திருமுறை

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

புராணம் 12ம் திருமுறை

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

## புதன்கிழமை

தேவாரம் — தனித்திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர் — 6ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின் றாரே.

திருவாசகம்

மாணிக்கவாசகர் — 8ம் திருமுறை

வேண்டத்தக்க தறிவோய் நீ வேண்ட
முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும்
உன்றன் விருப்பன்றே

திருவிசைப்பா — பண்: பஞ்சமம்

சேந்தனார் — 9ம் திருமுறை

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

திருப்பல்லாண்டு — பண்: பஞ்சமம்

சேந்தனார் — 9ம் திருமுறை

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

புராணம் — 12ம் திருமுறை

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரியமெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்

திருச்சிற்றம்பலம்

**வியாழக்கிழமை**

தேவாரம் பண்: கொல்லி

திருநாவுக்கரசர் 7ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே.

திருவாசகம்

மாணிக்கவாசகர் 12ம் திருமுறை

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட
போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்டோள்
முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ
இதற்கு நாயகமே.

திருவிசைப்பா பண்: பஞ்சமம்

கருவூர்த்தேவர் 9ம் திருமுறை

தத்தையங் கனையார் தங்கள் மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்
டத்திலங் கொருகூறுள்கண் வைத்தவருக்
கமருல களிக்கும் நின் பெருமை
பித்தனென் றொருக்காற் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யுங்
கைத்தலம் அடியேன் சென்னி மேல் வைத்தகங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்
சேந்தனார் 9ம் திருமுறை

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ் வண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும் போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமுந் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

புராணம்
சேக்கிழார் 12ம் திருமுறை

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

திருச்சிற்றம்பலம்

## வெள்ளிக்கிழமை

தேவாரம் பண்: தக்கேசி
சுந்தரமூர்த்திநாயனார் 7ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொரு ளும்தரு வானைப்
போக மும்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை என்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி வொண்ணா
எம்மா னைஎளி வந்தபி ரானை
அன்னம்வை கும்வ யற்பழ னத்தணி
ஆரூ ரானை மறக்கலு மாமே

திருவாசகம்

மாணிக்கவாசகர் 8ம் திருமுறை

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசயபோற்றியென்னும்
கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக்கண்டு கொள்ளே.

திருவிசைப்பா பண்: இந்தளம்

திருவாலியமுதனார் 9ம் திருமுறை

அன்ன நடையார் அமுத மொழியார்
அவர்கள் பயில் தில்லைச்
தென்னன் தமிழும் இசையும் கலந்த
சிற்றம் பலம் தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த தலத்துப்
புலித்தோல் பியற் கிட்டு
மின்னின் இடையாள் உமையாள் காண
விகிர்தன் ஆடுமே.

திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்

சேந்தனார் 9ம் திருமுறை

குழல்ஒலி யாழ்ஒலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணை வுஞ்சென்று
விம்மிமிகு திருவாரூரின்
மழவிடையாற்கு வழிவழி ஆளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

புராணம்

சேக்கிழார் 12ம் திருமுறை

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னால்அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனில் உலகர்முன் வருகென உரைப்பார்.

திருச்சிற்றம்பலம்

**சனிக்கிழமை**

தேவாரம் பண்: திருவிருத்தம்

திருநாவுக்கரசர் 4ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றெ னுள்ளமும் நானும்கிடந்தலந்தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே.

திருவாசகம் பண்: தக்கேசி

மாணிக்கவாசகர் 8ம் திருமுறை

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும்நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

கண்டராதி 9ம் திருமுறை

முத்தீ யாளர் நான் மறையர் மூவாயிரவர் நின்னோ
டொத்தே வாழுந் தன்மை யாளர் ஓதிய நான் மறையைத்
தெத்தே யென்று வண்டு பாடுந் தென்றில்லை யம்பலத்துள்
அத்தாவுன்றன் ஆடல் கலண அணைவதும் என்று கொளே!

திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்
சேந்தனார் 9ம் திருமுறை

நிட்டையிலா உடல் நீத்தென்னை ஆண்ட
நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித்
தட்ட மூர்த்திக்கொள் அகம்நெக ஊறும்
அமிர் தினுக் கால நிழற்
பட்டனுக் கென்னைத் தன் பாற்படுத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

புராணம்
சேக்கிழார் 12ம் திருமுறை

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும்: மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

திருச்சிற்றம்பலம்

**ஞாயிற்றுக்கிழமை**

தேவாரம் பண்: சீகாமரம்
திருஞானசம்பந்தர் 2ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

திருவாசகம்

மாணிக்கவாசகர் 8ம் திருமுறை

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருவிசைப்பா பண்: காந்தாரம்

கருவூர்த்தேவர் 9ம் திருமுறை

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்? கோடைத் திரைலோக்கிய
சுந்தரனே.

திருப்பல்லாண்டு பண்: பஞ்சமம்

சேந்தனார் 9ம் திருமுறை

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அள வில்லதோர் ஆனந்த
வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டு
கூறுதுமே.

புராணம்

சேக்கிழார் 12ம் திருமுறை

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
சோதியா நிற்கும் தில்லை பொதுநடம் போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

## கோளறு பதிகம்

**பொது** **பண்:பியந்தைக் காந்தாரம்**

**பாடியவர்: திருஞர்னசம்பந்தர்**

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொ டாமை யிவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
கொதியுறு கால னங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்ட னெந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதள தாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
கோளரி யுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலி யொடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியு நாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொ ளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபு ரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.
திருச்சிற்றம்பலம்.

## அபிராமிப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

# சிவபுராணம்

**பாடியவர்: மாணிக்கவாசகர்**

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏக னநேக னிறைவனடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈச னடி போற்றி எந்தை யடி போற்றி
தேச னடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்

எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாயப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பில்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந் தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலந்த மலர்ச் சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே

ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்ற தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## அபிராமி அந்தாதி

தனந்தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்
தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம்
தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே

## திருவாட்டி நாகம்மா நல்லதம்பி அவர்களின் வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாணக் குடா நாட்டிலே மேற்றிசையிலே அமைந்தது சோழியபுரம் எனப்புகழ் பெற்ற சுழிபுரம். சுழிபுரம் மேற்கிலே உயர் சைவ வேளாண் குடியிலே தர்மலிங்கம் சின்னக்குட்டி தம்பதிகளுக்கு ஏக புத்திரியாக நாகம்மா அவர்கள் 1927ம் ஆண்டில் பிறந்தார். இவருக்கு கந்தசாமி, சின்னப்பு என சகோதரர்கள் இருவர். கோலாலம்பூரில் அரச பணி புரிந்தவர்கள். புகழ்பெற்றவர்கள்.

சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பெற்ற பறாளாய்ப் பள்ளில் இடம்பெற்ற வினாயகர் கோவில் மணியோசையோடு சுழிபுரக் கிராமம் விழித்துக் கொள்ளும். மருதநிலம் சார்ந்த பிரதேசம். சைவமும் தமிழும் வளர்ந்த-வளர்த்தது இப்பிரதேசம். இக்கிராமத்திலே பிறந்த திருவாட்டி நாகம்மா இளம் வயது தொட்டு சைவமதப் பற்றும் விருந்தோம்பும் பண்பும் கொண்டு வலம்புரி முத்தென விளங்கினார். ஆரம்பக் கல்வியோடு புராண இதிகாசங்களையும் கற்றுத் தமிழறிந்தவராக விளங்கினார்.

திருமண வயதை எட்டியதும் சகோதரர்கள் உறவினர்கள் 1948ல் இராசபட்சம் பரம்பரையில் உதித்த சுப்பிரமணியம் நல்லதம்பி (நல்லராசா மாஸ்டர்) அவர்களை மணம் செய்து வைத்தனர். துணிவு, மதிநுட்பம், நேர்மை, நிதானம், வாய்மை முதலிய நற்பண்புகளைக் கொண்ட நல்லதம்பி (நல்லராசா மாஸ்டர்) அதிபரின் வாழ்க்கையில், வெற்றிக்கு வள்ளுவரின் வாசுகி போல் உற்ற துணையாக சிறப்பாகச் செயற்பட்டவர்.

திருமணப் பேற்றின் பலனாக இரதி, மதிவதனி (கா.செ) , தேவி, இராசதிலகம், சுப்பிரமணியம், சந்திரமதி, சிவபதி(சுசி) கலாராணி ஆகிய பிள்ளைகளைத் தாலாட்டி மகிழ்ந்தவர். பிள்ளைகளுக்கு பொன், பொருள், நிலம் என்பன தேடி சிறந்த உத்தியோக மதிப்புள்ள மருமகன்மாரைக் கண்டு மகிழ்ந்தவர்.

மூத்த மகளான இரதி(ஆசிரியை) அவர்களுக்கு சொந்த மைத்துனரான கதிரவேலு- பாக்கியம் தம்பதியினரின் மகன் நடராசா அவர்களை (ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்) திருமணம் செய்து வைத்தார். நளினி(கா.செ), காந்தரூபன்(படவரைஞர், ஓமான்) காந்தகுமாரன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன்), காந்தவேள் (கா.செ), காந்தகௌரி ஆகிய பேரப்பிள்ளை களைகளின் அன்பைக் கண்டவர், அனுபவித்தவர். மகிழ்ந்தவர்.

இரண்டாவது மகளான மதிவதனி அவர்களுக்கு மாணிக்கம் சரவணமுத்து (மலாயன் பென்சனியர்) தம்பதிகளின் மகனான ஆறுமுகத்தை (தொழில்நுட்பவியலாளர்) திருமணம் செய்து வைத்தார் ஆவார். இவரும் சொந்த மருமகன். இவர்களுக்கு தயாளினி (அவுஸ்திரேலியா) ,சரவணபவன் (லண்டன்), நாகரூபன் (அவுஸ்திரேலியா) நிஷாந்தினி (லண்டன்), என்னும் அருமைச் செல்வங்களைப் பெற்று வாழ்ந்த நாளில் யாவரையும் கலங்க வைத்து மதிவதனி தனது இருபத்தொன்பதாவது வயதில் இறைவனடி சேர்ந்தார். இச்சம்பவத்தால் திருவாட்டி நாகம்மா அவர்கள் பெரிதும் நோய் வாய்ப்பட்டார். .

அடுத்த மகள் தேவி அவர்களுக்கு அன்னாரின் கணவரின் தந்தை வழி உறவினரான சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த பொன்னையா அன்னமுத்து தம்பதிகளின் மகனான நல்லையா (தொழில்நுட்வியலாளர்) என்பவரைத் திருமணம் செய்து வைத்து தமயந்தி (ஆசிரியை), ஜெகமதி (கனடா), சுஜாந்தினி (யாழ். பல்கலைக்கழகம் வணிகபீடம்), அயிலன்(பொறியியல் பீட மாணவன் பேராதனை பல்கலைக்கழகம்),துஷியந்தி (மாணவி வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலை), ஜெயமதி (மாணவி வவுளியா சைவப்பிரகாச வித்தியாசாலை) ஆகிய பேரச் செல்வங்களையும் பூட்டப்பிள்ளையையும் கண்டு மகிழ்ந்தார்.

அடுத்த மகளான இராசதிலகம் ஆறுமுகம் (தொழில்நுட்பவியலாளர்) அவர்களை திருமணஞ் செய்து மதி (தெகிவளை உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவி) என்னும் மகளைப் பெற்றார்.

தயாளினி - இராகவனைத் (அவுஸ்திரேலியா) திருமணம் செய்து கிருஷ்ணா என்ற பூட்டப்பிள்ளையைக் கண்டு மகிழ்ந்தவர். சரவணபவன் சூட்டி (லண்டன்)திருமணத்தை வாழ்த்தியவர். நாகரூபன் - அகல்யா (அவுஸ்திரேலியா) திருமணத்தை வாழ்த்தியவர் நிசாந்தினி - வினோதன்(லண்டன்) திருமணத்தால் பூட்டி மதுரிகாவைக் கண்டு மகிழ்ந்தவர். ஜெகமதி - கலாதன் (கனடா) அவர்களின் திருமணத்தால் மயூரிகா என்னும் பூட்டப்பிள்ளையைக் கண்டு மகிழ்ந்தவர்.

அன்னாரது ஏக புத்திரன் சுப்பிரமணியம் இவருக்குத் தேவையான ஒத்தாசைகளைச் சேவைகளைச் செய்து அவரது இறுதிக் கடமைகளையும் சிறப்பாக நடாத்தி முடித்தார்.

அடுத்த மகளான சந்திரமதி (ஆயுர்வேத வைத்தியர்) வடமராட்சி கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த நடராஜா தங்கரத்தினம் தம்பதிகளின் புதல்வன் ஜெயராஜா அவர்களுக்கு (ஆயுர்வேத வைத்தியர், அம்பிகை வைத்தியநிலையம், வட்டக்கச்சி) திருமணம் செய்து ஜெயமாருதி (கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வி மாணவன்) என்னும் பேரனைக் கண்டு மகிழ்ந்தவர்.

அடுத்த மகளான சிவபதி (சுசி) (யாழ். பல்கலைக்கழகம் கலைப்பட்டதாரி,) பண்டத்தரிப்பைச் சேர்ந்த இராஜதுரை நாகராணி தம்பதிகளின் புதல்வன் இராஜேஸ்வரன் (யாழ். பல்கலைக்கழகம், வணிகப் பட்டதாரி ) என்பவரைத் திருமணம் செய்து வைத்து கனடாவில் மோனிஷா (கனடா), கோபிஷா (கனடா), தேனுகா (கனடா) என்னும் பேர்த்திகளைக் கண்டு மகிழ்ந்தார்.

கடைசி மகளான கலாராணி அவர்களுக்கு மூளாயைச் சேர்ந்த கணேசராசா (Reted ASP Prison), இந்திராணி தம்பதிகளின் புதல்வன் தாயாபரன் அவர்களைத் திருமணம் செய்து கஜாளினி (யாழ்ப்பபாணக் கல்லூரி மாணவி) காயத்திரி (யாழ்ப்பபாணக் கல்லூரி மாணவி) என்னும் பேரப்பிள்ளைகளைக் கொஞ்சி மகிழ்ந்தவர்.

பூட்டப்பிள்ளைகளைக் கண்டு நான்கு தலைமுறை சிறப்பைக் கண்டவர். நிறைவான வாழ்வு வாழ்ந்து கல்வி, செல்வம், துணிவு, தயாளகுணம் என்பவற்றை அணிகலன்களாகக் கொண்ட திருவாட்டி நாகம்மா அவர்கள் 26.06.2006 திங்கட்கிழமை காலை எட்டு மணியளவில் அன்னாரின் மகளான இராசதிலகத்தின் கொழும்பு இல்லத்தில் தனது எண்பதாவது வயதில் தனது இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் திருவாட்டி நாகம்மா - நல்லதம்பி (நல்லராசா மாஸ்டர்) அவர்களின் புகழை சகல ஆளுமைகளையும் உள்வாங்கி சிறப்பாக வாழ இறையருளை வேண்டுவோமாக.

**"தன்னுள்ளத் தோங்குகுண சால்பு நெறிசாரத்**
**தாலாட்டு புரிகின்ற தாயன்புக் கீடாய்**
**என்னதான் வாழ்த்துக்கள் எமக்கு கிடைக்கும்**
**யாவரும் இனிதான தாயன்பைக் கொள்வோம்"**

## ஔவையார் அருளிய
## விநாயகர் அகவல்
### ஆசிரியப்பா

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் மடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூசிக வாகன!
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே

ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குந்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டுக் கொன்றிட மென்ன
அருள்தரும் ஆநர்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை யில்லா ஆநந் தம்மளித்
தல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக்கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

விநாயகர் அகவல் முற்றிற்று

# வம்சா வழ

தர்மலிங்கம் சின்னக்குட்டி

*கந்தசாமி *சின்னப்பு நாகம்மா

இரதி + நடராசா
* நளினி
காந்தரூபன்
காந்தகுமாரன்
* காந்தவேள்
காந்தகௌரி

* மதிவதனி + ஆறுமுகம்
தயாளினி — இராகவன் — கிருஷ்ணா
சரவணபவன் — சூட்டி
நாகரூபன் — அகல்யா
நிசாந்தினி — வினோதன் — மதுரிகா

தேவி + நல்லையா
தமயந்தி
ஜெகமதி — கலாதன் — மயூரா
சுஜாந்தினி
அயிலன்
துஷியந்தி
ஜெயமதி

இராசதிலகம் + ஆறுமுகம்
மதி

சுப்பிரமணி

சுப்பிரம

* மாணிக்கம் + * சரவணமுத்து
* மாரிமுத்து + கமலாதேவி
பாக்கிய + * கதிர்வே

* காலஞ்செ

# ...சா வழி

சுப்பிரமணியம் வள்ளியம்மை

...ரிக்கம் + ...ணமுத்து

* மாரிமுத்து + கமலாதேவி

பாக்கியம் + * கதிர்வேலு

**நல்லதம்பி**

தங்கம்மா + * சுப்பிரமணியம்

* சின்னத்தங்கம் + * மகேஸ்வரன்

* கந்தசாமி + ஞானதேவி

இராசதிலகம் + ஆறுமுகம்
- மதி

சுப்பிரமணியம்

சந்திரமதி + ஜெயராஜா
- ஜெயமாருதி

சிவபதி + இராஜேஸ்வரன்
- மோனிஷா
- கோபிஷா
- தேனுகா

கலாராணி + தயாபரன்
- கஜாழினி
- காயத்திரி

...தன்

...ா

* காலஞ்சென்றவர்கள்

# நன்றி மறவோம்
# நாளும் நினைவோம்

எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வத்தின்
இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்ட
உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் அனுதாபச்
செய்திகள் அனுப்பியவர்களுக்கும் அந்தியேட்டிக்
கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்தித்த அனைவருக்கும்
எங்கள் இதய பூர்வமான நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

சிவா பதிப்பகம் 69/1, திருவையாறு